21st January 1964]

திரு. ம. கமலநாதன் : திருவண்ணுமலை தேர்தலில் எவ்வளவு ஜீப்கள், எவ்வளவு போலீஸ் லாரிகள் எவ்வளவு தனி லாரிகள் உபயோகப்படுத்தப்பட்டன அரசாங்கச் சார்பில் ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்கள் ஸ்தல ஸ்தாபன அமைச்சராக இருக்கிருர்கள். பஞ்சாயத்து யூனியன் ஜீப்கள் உபயோகப்படுத்தப்பட்டனவா என்ற கேள்விக்குப் பின் தேர்தல் பற்றி கேட்டால் அவர் எப்படி பதில் சொல்ல முடியும் ?

கனம் சபாநாயகர் : எவ்வளவு என்று இவர் சொல்ல முடியாது.

திரு. வி. எஸ். எஸ். மணி : பஞ்சாயத்து ஜீப்களை எந்தெந்த அதிகாரிகள் உபயோகப்படுத்தலாம் என்று வரையறுக்கப் பட்டிருக்கிறது ? அவர்கள் யார் யார் ?

MR. SPEAKER : That again is outside the scope of the main question.

புலவர் கா. கோவிந்தன் : தேர்தலுக்காக என்ருல் தேர்தலுக்கு இரண்டு மூன்று நாட்களுக்கு முன்னுல் வந்திருந்தால் போதும். இந்த ஜீப்கள் எந்தத் தேதியில் இருந்து பயன்படுத்தப்பட்டன என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிக்க வேண்டும்.

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : விரிவான தகவல் இல்லை.

Resolutions passed by the Conference of the Chairmen of Municipal Councils

* 60-B *Q*.—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether a copy of all the resolutions passed by the Conference of the Chairmen of Municipal Councils, held in November, 1963, in Madras City was received by the Government; and

(*b*) if so, the details of the action taken on them?

THE HON. SRI S. M. A. MAJID : (*a*) Not yet.

(*b*) Does not arise.

(அ) இது வரை இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

பஞ்சாயத்துக்களுக்கான தேர்தல்

* 60-உ கேள்வி—திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி
திரு. மீ. கலியாணசுந்தரம்
புலவர் கா. கோவிந்தன்
திரு. கி. நாராயணசாமி பிள்ளை
} : கனம் ஸ்தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

பஞ்சாயத்து தேர்தல்களை எப்போது நடத்த அரசாங்கம் உத்தேசித்துள்ளது ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : இம்மாநிலத்திலுள்ள எல்லா பஞ்சாயத்துக்களுக்கும் அடுத்த சாதாரண தேர்தலுக்குரிய தேதிகளை நிச்சயிக்கும் விஷயம் தேசிய நெருக்கடி நிலைமை காரணமாக இன்னும் அரசினரால் முடிவுசெய்யப்படவில்லை.

திரு. ம. கமலநாதன் : அடுத்த பொதுத் தேர்தலுக்கு முன்பாவது இத்தேர்தல்கள் நடைபெற்று விடுமா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : நகராட்சித் தேர்தல் பிப்ரவரியில் நடக்க இருக்கிறது. பஞ்சாயத்து பற்றியது பரிசீலனை செய்து பின்பு முடிவு செய்யப்படும்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : நெருக்கடி நிலை இருந்தபோதிலும் நகராட்சித் தேர்தல் நடைபெற அரசாங்கம் முடிவு எடுத்திருக்கிறது. நகராட்சித் தேர்தல் சட்டத்தை திருத்தியபோது ஆறு மாதங்கள் கழித்து நடத்தலாம் என்பதை நிராகரித்து விட்டு அவசரமாக நடத்தவேண்டுமென்று முடிவு எடுத்திருக்கிறபோது பஞ்சாயத்து தேர்தல்களையும் ஏன் நடத்தக்கூடாது ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : அது சர்க்கார் பரிசீலனையில் இருக்கிறது. அப்படி முடிவு எடுத்து விட்டால் சட்டம் கொண்டு வந்து உங்கள் அனுமதியைக் கோருவோம்.

SRI C. CHIRANJEEVULU NAIDU : Sir, is there any proposal under the consideration of the Government to amend the Act so as to provide for direct election for the Panchayat President and Panchayat Union Chairman, before the elections are conducted?

THE HON. SRI S. M. A. MAJID : There is no such definite proposal but it is under consideration.

புலவர் கா. கோவிந்தன் : பஞ்சாயத்து தேர்தல் வருவதற்கு இன்னும் சில நாட்களாகும் என்று அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள். ஒரு வார்டில் 300 வாக்காளர்கள் என்றும், இன்னொரு வார்டில் 1,000 வாக்காளர்கள் என்றும் இருக்கக் கூடிய நிலைமையிருக்கிறது. சில பஞ்சாயத்துக்களை பிரிந்து தனிப் பஞ்சாயத்தாக அமைத்துக் கொள்ள வேண்டுமென்று விருப்பம் தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே அந்த மாறுதலை தேர்தலுக்கு தேதி நிர்ணயிப்பதற்கு முன்பு செய்வதற்கு அரசாங்கம் வழிவகை செய்யுமா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : தனிக் கேள்வி வேண்டும்.

திரு. எஸ். சதாசிவம் : தலைவர் அவர்களே, பஞ்சாயத்துத் தலைவர்கள் தேர்தலுக்கு இன்னும் காலவரை செய்யப்படாமையினால், பஞ்சாயத்து யூனியன் தலைவர் பதவி காலியாக இருந்தால், உப தலைவர் அந்தத் தேர்தலை நடத்திவிட வேண்டுமென்று இருந்தாலும் அவ்வாறு நடத்தாமல் இருந்தால் அரசாங்கமே ரெவின்யூ டிவிஷனல் அதிகாரிகளைக் கொண்டு இந்தத் தேர்தலை உடனடியாக நடத்த முன்வருமா ?

21st January 1964]

கனம் சபாநாயகர் : என்று ஹைபொதடிகலாக இருக்கிறது, இந்தக் கேள்வி.

திரு. ஜே. மாதா கவுடர் : சட்டசபை உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு எப்படி இரட்டை மெம்பர் தொகுதிகளை எடுத்து விட்டோமோ, அதுபோல பற்ற பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன் ஆகியவற்றின் தேர்தலிலும் இரட்டை மெம்பர் தேர்தலை எடுத்துவிடுவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : அந்தமாதிரி உத்தேசம் இல்லை.

திரு. டி. கார்ச்சா கவுடர் : அடுத்த பஞ்சாயத்து யூனியன் தேர்தலிலே தலைவர்களை மக்களே நேரிடியாகத் தேர்ந்தெடுக்கும்படி ஏற்படுத்துவதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : இந்தக் கேள்விக்கு முன்பே பதில் சொல்லிவிட்டேன். அதே பதில் தான் இதற்கும்.

திரு. எம். தண்டாயுதபாணி : பஞ்சாயத்து யூனியன் அமைப்புப்படி சில யூனியன்களில் 60, 62 பஞ்சாயத்துக்களும், சிலவற்றில் 14, 15 பஞ்சாயத்துக்களும் இருக்கும்படி அமைக்கப்பட்டிருக்கிறது. இப்போது தேர்தலை ஏற்படுத்துவதற்கு முன்பாக இதைச் சமமாகப் பிரிக்கும் உத்தேசம் சர்க்காருக்கு உண்டா என்று கேட்க விரும்புகிறேன்.

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : தனியாகக் கேள்வி போட்டால் பதில் சொல்கிறேன். மூலக் கேள்வியிலிருந்து இது எழவில்லை.

திரு. எம். கொளந்தைசாமி கவுண்டர் : சேலம் ஜில்லாவில் ஏர்க்காடு தொகுதியில் ஒரு பஞ்சாயத்து யூனியனிலே 64 கிராமங்கள் இருக்கின்றன. அது மலைப் பிரதேசம். ஆகவே அதை ஏழு, ஏழு கிராமங்களுக்கு ஒரு யூனியன் விதமாகப் பிரித்து அமைத்துக் கொடுக்கும்படி அதிகாரிகளுக்கும், அமைச்சர்களுக்கும் எழுதியிருக்கிறோம். அவ்வாறு அமைத்துக் கொடுக்கும் உத்தேசம் உண்டா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : கனம் அங்கத்தினர் கேட்கிற விவரம் இப்போது என்னிடம் இல்லை. அதை மறுபடியும் என்னுடைய கவனத்திற்கு வரும்படி எழுதி அனுப்பினல் அது மலைப் பிரதேசமாக இருப்பதனுல் சிறந்த கவனம் செலுத்தப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். சதாசிவம் : அறவக்குறிச்சி பஞ்சாயத்து யூனியன் தலைவர் பதவி காலியாக இருப்பதனுல் உடனடியாக அதற்குத் தலைவர் தேர்தலை நடத்த அரசாங்கம் முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : என்னிடம் தகவல் இல்லை.

[21st January 1964

திரு. பி. கே. மூக்கையா தேவர் : நமது மாநிலத்தில் எந்த பஞ்சாயத்திலும் சேராத ஊர்கள் எத்தனை இருக்கின்றன? வரப் போகிற தேர்தலுக்கு முன்னால் அவற்றை ஏதாவதொரு பஞ்சா யத்தில் அங்கங்கே சேர்க்கும் உத்தேசம் உண்டா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : எனக்குத் தெரிந்த வரையில் இதுமாதிரி பத்துப் பதினைந்து ஊர்களே இருக்கலாம். பூரண மான தகவல் என்னிடம் இல்லை. தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்கிறேன்.

திரு. ம. கமலநாதன் : பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன் அமைக்கப்பட்டபோது அதன் காலம் ஐந்து வருஷம் என்றே வரை யறுக்கப்பட்டது. ஆகவே ஐந்து வருஷத்திற்குப் பின்னால் கட்டா யமாகத் தேர்தல் நடத்தப்படும் என்று சர்க்கார் முடிவு செய்யுமா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : முன்பு கூறிய பதிலையேதான் இதற்கும் கொள்ளவேண்டும்.

புலவர் கா. கோவிந்தன் : பஞ்சாயத்து யூனியன்களில் கிராம பஞ்சாயத்து தலைவர்களும், நகரசபைத் தலைவர்களும் சேர்ந்து இருக்கக்கூடிய இடங்கள் இருக்கின்றன. ஆகையால் நகரசபைத் தேர்தல், பஞ்சாயத்து தேர்தல் ஆகியவை ஒரே காலத்தில் நடத் தப்படுமா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : முன்பு கூறிய பதிலையேதான் இயலாது.

திரு. எஸ். ஜே. ராமசாமி : தலைவர் அவர்களே, பஞ்சாயத் துத் தேர்தல் பழைய வாக்காளர் பட்டியலிலே நடத்தப்படுமா? அல்லது புதிய வாக்காளர் பட்டியல் தயார் செய்யப்பட்டு நடத்தப் படுமா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : அது விஷயம் எல்லாம் தேர்தல் பற்றி முடிவான பிறகு பரிசீலனை செய்யப்படும்.

திரு. டி. கார்ச்சா கவுடர் : ஒரு ரெவின்யூ கிராமத்திற்கு ஒரு பஞ்சாயத்து வைப்பது என்பது சர்க்காரின் கொள்கை. இரண்டு மூன்று ரெவின்யூ கிராமங்களுக்கு ஒரு பஞ்சாயத்து என்று வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த மாதிரி கேஸ்கள் சர்க்கா ரின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் அவற்றைத் தனித்தனி யாகப் பிரிக்க அரசாங்கம் ஒப்புக்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் சபாநாயகர் : கொண்டு வந்தால் என்ன, கனம் அங்கத் தினர் கொண்டு வரட்டும். அப்புறம் கேள்வி போடலாம்.

21st January 1964]

Services under Local Bodies

* 60-D Q.—SRI P. K. MOOKIAH THEVAR : Will the Hon. the Minister for Local Administration be pleased to state whether any instructions have been issued to the Local Bodies that before making appointments and promotions of non-qualified persons previous sanction of the Government has to be obtained?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : ஆம்.

Mofussal bus stand at Broadway

* 60-E Q.—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) whether the Government are aware of the hardships of the passengers to move about and take seats in the Broadway mofussal bus stand at Madras owing to the inadequacy of space in the bus stand; and

(b) if so, the action taken for the expansion of the bus stand?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : (அ) ஆம்.

(இ) இவ்விஷயம் அரசாங்கத்தின் பரிசீலனையில் உள்ளது.

புலவர் கா. கோவிந்தன் : இப்போது இருக்கிற பஸ் நிலையம் மிக நெருக்கடியான இடத்தில் இருக்கிறது. அதற்கு எதிரில் ஐலண்டு க்ரௌண்டு இருக்கிறது. மாடிக் கட்டிடமாகக் கட்டினால் தான் கடல் காற்று நகரத்திற்குள் வருவது தடை செய்யப்படும் என்று ஆட்சேபனை இருப்பதனால் அந்த இடத்தில் பஸ் நிலையத்தை அமைக்க முன் வந்தால் பொதுஜனங்களுக்கும் வசதியாக இருக்கும். அப்படிச் செய்ய அரசாங்கம் முன்வருமா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : ஐலண்டு க்ரவுண்டு மிலிடரி இலாகாவுக்குச் சொந்தமான இடம். நமக்கு அது சம்பந்தமான முடிவு எடுக்க அதிகாரம் இல்லை.

கனம் சபாநாயகர் : கேள்விகள் முடிவடைந்தன.

[Note.—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II—POINT OF ORDER

DELAY IN RECEIT OF ANSWERS.

திரு. எஸ். மாதவன் : சார், ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். தலைவர் அவர்களே, நம்முடைய மன்றத்தின் 34-வது விதிப்படி ஒரு கேள்வியை கனம் அங்கத்தினர் எழுதி அனுப்பினால் அதற்கு அரசாங்கத்திலிருந்து 10 நாட்களுக்குள் பதில் தரப்படவேண்டும். நாங்கள் போடுகின்ற கேள்விகளுக்கு ஒரு ஆண்டு ஆனாலும் கூடப் பதில் கிடைப்பதில்லை. குறிப்பாக 67-ம் நம்பர் கேள்வியை நான் 11—12—1963 அன்று புதுப்பித்திருக்கிறேன். அந்தக் கேள்வி 1½ ஆண்டுகளுக்கு முன்னால் போடப்பட்டது . . .

MR. SPEAKER : I do not think this comes under a point of order. The hon. Member can write to me, ask for a reply and then raise all legal questions. I will answer him in my chamber. It is not a point of order.